23.11.2021

அ.வ.எண். 34/2016

கலாராணி (P.W.1)

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் 466/3A. அந்த 466/3A ரீசர்வே எண்ணில் எவ்வளவு சென்டு சொத்து இருக்கிறது என்றால் 23 3/4 சென்டு இருக்கிறது. உங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை கேட்கவில்லை அந்த ரீசர்வே எண் சொத்தில் இருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. அந்த 23 3/4 சென்டில் யார் எல்லாம் பாத்தியப்பட்டிருக்கிறார்கள் என்றால் அஜின்குமார், அழகேஸ்குமார், ஜெபின், கலாராணி . நீங்கள் குறிப்பிட்ட நபர்களை தவிர வேறு யாருக்கும் எந்த அவகாசமும் கிடையாது என்றால் சரிதான். இந்த ரீசர்வே எண்ணை பொறுத்து உங்கள் அவகாசத்தை காட்டுவதற்கு பட்டா ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த ரீசர்வே எண்ணின் பழைய சர்வே எண் என்ன என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த பழைய சர்வே எண்ணின் எவ்வளவு என்று தெரியுமா என்றால் தெரியாது. நீங்கள் தாக்கல் செய்திருக்கும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன சர்வே எண் குறிப்பிட்டு இருக்கிறது என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த ஆவணத்தில் குறிப்பிடும் சொத்தானது எந்த திசையில் குறிப்பிட்டு இருக்கிறது என்றால் வடகிழக்கு திசையில் இருக்கிறது. அந்த ஆவணத்தில் வடக்கு தெற்கு பக்கமாக குறிப்பிட்டு இருக்கிறது நீங்கள் மாற்றி கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சொத்தின் கிழக்கு பக்கமாக சாலை ஒன்று செல்கிறது என்றால்சரிதான். அந்த ரோடு தார் ரோடு என்றால் ச ரிதான். அந்த ரோடு போட்டு சுமார் எவ்வளவு ஆண்டு இருக்கும் என்றால் நான் பிறப்பதற்கு முன்னர் அந்த சாலை உள்ளது சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் இருக்கிறது. அந்த தாவா சொத்தின் கிழக்கு பக்கமாக ஒரு கோயில் இருக்கிறது என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணத்தில் எந்த பக்கமும் சாலை இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்தள்ள ஆவணத்திற்கு முன்னரே ரோடு இருக்கிறது என்றால் சரிதான். ராஜைய்யன் நாடார் யார் என்றால் எனது அப்பா. ராஜைய்யன் நாடார் அவரது சொத்திற்கு ரோட்டிற்கு இடம் விட்டு கொடுத்தார் என்றால் சரிதான். சாலையின் 2 பக்கமும் அவரின் சொத்து இருக்கிறது. ராஜைய்யன் நாடாருக்கு அவரின் சொத்தில் சகல உரிமையும் உண்டு என்றால் சரிதான். அவர் உயிருடன் இருக்கும்போது அவரின் சொத்தை பொறுத்து எதேனும் விலை ஆவணம் எழுதிக்கொடுத்திருந்தால் அதில் உங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். 24.6.1983 அன்று ராஜைய்யன நாடார் மாணிக்கநாடாரின் மனைவி சசிகலா என்பவருக்கு ஆவண எண்.4075/1983ன் படி இந்த 23 3/4 சென்டில் ஒரு 2சென்டு சொத்தை எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். 24.3.1983 அன்று ஆவண எண்.1094/1983 அன்று ஆவண எண் படி சசிகலா என்பவர் செல்வராணி என்பவருக்கு அந்த 2 சென்டு சொத்தை கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். 20.09.1982 அன்று ஆவண எண்.1424/1982 படி ராஜைய்யன் நாடார் என்பவர் இந்த பிரதிவாதியின் கணவருக்கு 5 சென்டு சொத்தை கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். அப்படி பிரதிவாதிக்கு மொத்தம் 7 சென்டு உரிமைப்பட்டது என்றால் சரிதான். இந்த பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தது போக மீதியுள்ள சொத்து தான் உங்கள் அப்பா கைவசம் இருந்தது என்றால் சரியல்ல. இந்த ரோடுக்கு விட்டு கொடுத்த இடம் போக மீதமுள்ள இடம் தான் கைவசத்தில் இருந்தது என்றால் சரியல்ல. நீங்கள் விவரிக்கப்பட்டுள்ள தாவா சொத்தை போல் அங்கு எந்த ஒரு சொத்தும் இல்லை என்றால் சரியல்ல. 23 3/4 சென்டின் கிழக்கு பக்கம் கோயில் இருக்கிறது என்றால் சரிதான். உங்கள் பிராதில் நீங்கள் கிழக்கு பக்கம் ரோடு இருக்கிறது என்று கூறியிருக்கிறது தவறு என்றால் சரியல்ல கிழக்கு பக்கமாக தான் ரோடும் கோயிலும் இருக்கிறது. தெற்கு பக்கத்தில் ராஜ் என்பவர் சொத்து இருக்கிறது என்றால்சரிதான். உங்கள் பிராதில் நீங்கள் தெற்கு பக்கம் செல்லையன் நாடார் சொத்து இருக்கிறது என்று கூறியிருப்பது தவறு என்றால்சரியல்ல. மேற்கு பக்கத்தில் யாரின் சொத்து இருக்கிறது என்றால் தங்கப்பன் சொத்து இருக்கிறது. நீங்கள் பிராதில் தங்கசாமி இருப்பதாக கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல. வடக்கு பக்கம் ரவிசந்திரன் சொத்து இருக்கிறது என்றால் சரிதான். நீங்கள் பிராதில் சொல்லப்பட்டுள்ள எல்கை சரியானதா என்றால் சரியானது. 23 3/4 சென்டு ஒரே கண்டமாக தான் இருக்கிறது அதில் வேறு யாருக்கும் எந்த அவகாசமும் இல்லை. அந்த 23 3/4 சென்டு சொத்தில் எதேனும் வீடு இருக்கிறதா என்றால் 3 வீடு இருக்கிறது. உங்கள் பிராதில் இப்படி தாவா சொத்தில் 3 வீடு இருப்பதாக கூறவில்லை என்றால் சரிதான்.

அதில் யார் யார் வீடு இருக்கிறது என்றால் அஜீத்குமார், அழகேஸ்குமார், ஜெபின் வீடு இருக்கிறது. நீங்கள் அவர்களின் வீடு இருப்பதற்காக எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 7 சென்டு சொத்தின் மேற்கு பக்கத்தில் பிரதிவாதியின் கல்லறை இருக்கிறதா என்றால் இல்லை ஒரு பழைய கல்லறை அது என் பெற்றோரின் கல்லறை. இந்த பிரதிவாதி 7 சென்டு சொத்தில் வீடு இருப்பதாக அவர் எதிர்வாதுரையில் கூறியிருக்கிறார் அதை பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த எதிர்வாதுரையில் பிரதிவாதி எந்த சொத்தை பற்றி கூறியிருக்கிறார் என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த 7 சென்டும் பரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தானது ரோடிலிருந்து கிழக்கு பக்கத்தில் உயர்வான கண்டமாக இருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. இந்த பிரதிவாதியின் சொத்தின் மேற்கு பக்கத்தில் கருங்கல்லால் அமைக்கப்பட்ட வேலி ஒன்று இருக்கிறது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் பிரதிவாதியின் பெயர் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும் செல்வநாயகம் அவர் உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை. இந்த பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 7 சென்டு சொத்தின் கிழக்கு பக்கமும் தெற்கு பக்கமும் வேலி அமைக்கப்பட்டள்ளது என்றால்சரியல்ல. இந்த பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 7 சென்டு சொத்தை அவர்கள் தனியாக 4 எல்லைகள் குறிப்பிட்டு அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 7 சென்டு சொத்தில் தான் செல்வநாயகம் என்பவரின் கல்லறை இருக்கிறது என்றால் சரியல்ல. இந்த 7 சென்டு சொத்தில் எத்தனை புழியமரம் நிற்கிறது என்றால் அந்த 23 3/4 சென்டு சொத்தில் நிறைய மரம் இருக்கிறது. இந்த 7 சென்டு சொத்தில் சுமார் 20 புழியமரம் நிற்கிறது அதன் பலனை இன்று வரை பிரதிவாதிகள் தான் அனுபதித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நீங்கள் எதிர்வாதுரையில் 7 கண்டம் பிரதிவாதியின் வசம் தனியாக இரக்கிறது என்று கூறியும் நீங்கள் உங்கள் சொத்து நீங்கள் கூறுவது போல் ஒரே இடமாக இருக்கிறது என்பதை நிருபிக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் மொத்த தாவா சொத்தை அனுபவத்து வருவதால் நாங்கள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. நீங்கள்முயற்சி செய்திருந்தால் உங்கள் கண்டம் மொத்தமாக இல்லை என்று தெரிந்து விடும் என்பதால் தான் நீங்கள் எதுவும் செய்யவில்லை ன்றால்சரியல்ல. செல்வநாயகம் 24.10.1990 ல் இறந்து போனார் என்றால் சரிதான். செல்வநாயகம் இறந்த பிறகு அவரின் அவகாசிகள் 6 பேர் சேர்ந்து பிரதிவாதியின் மகன் சுரேஷ் என்பவர் பெயரில் 14.12.2015ல் ஒரு விடுதலை பத்திரம் ஒன்று எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வதுபோல் உங்களிடம் கைவச அனுபவம் இல்லை பிரதிவாதியின் மகன் சுரேஷ் என்பவர் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல்செ ய்வதற்கு முன்னரே சுரேசின் கைவசம் தான் சொத்து இருக்கிறது என்றால்சரியல்ல. இந்த வழக்கில் சுரேஷ் என்பவர் முக்கிய தரப்பினர்ஆனால் நீங்கள் அவரைல கட்சி சேர்க்காமல் இருப்பதால் இந்த வழக்கானது நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல் இந்த வழக்கின் பிரதிவாதி உடல்நலம் சரியில்லாமல் படுக்கையில் இருந்து வருகிறார் அவர் மீது நீங்கள் வழக்கு தாக்கல்செ ய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் ஆவணத்தில் உங்கள் தந்தை யாருக்கு எந்தா சொத்து எழுதிக்கொடுக்கிறார் என்ற விவரம் சரியாக இருக்கிறது மேலும் பிரதிவாதியின் ஆவணத்தில் அது தெரியும் நாங்கள் அதை தாக்கல்செ ய்துள்ளோம் ஏனறால்' சரியல்ல. இந்த பிரதிவாதிக்கோ அவரின் மகனுக்கோ இந்த தாவா சொத்தில்எந்த உரிமையும் இல்லை நீங்கள் வருவாய் துறையிலோ வேறு எங்கிலே அவர்களுக்கு உரிமை இல்லை என்று மனு கொடுத்துள்ளீர்களா என்றால் இல்லை தாவா சொத்தை நாங்கள் தான் கைவசம் வைத்து அனுபவித்து வருகிறோம் அதனால் எந்த மனுவும் கொடுக்கவில்லை. இந்த தாவா சொத்தின் பட்டாவானது சுரேஷ் என்பவரின் பெயரில் இருப்பதால் தான் நீங்கள் அந்த ஆவணத்தை இங்கு தாக்கல் செய்யவில்லை. நீங்கள் உங்களுக்கு உறுத்து கட்டளை பரிகாரம் வேண்டி ஒரு மனு ஒன்று தாக்கல்
செ ய்துள்ளீர்கள் அதன் விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த மனு என்ன ஆனாது என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த மனுவில் பிரதிவாதியின் சொத்தான 7 சென்டை தவிர மற்ற சென்டுக்கு தான் உங்களுக்கு நீங்கள் கேட்ட பரிகாரம் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த இடைக்கால மனுவானது சுரேஷ் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் உங்களுக்கு உரிமை எதுவும் இல்லை என்று தான் அந்த மனுவில் உத்தரவு வழங்கப்பட்டது. இந்த பிரதிவாதியானவர் அந்த இடைக்கால மனுவில் 10 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. இந்த இடைக்கால மனுவின் தீர்ப்பை பொறுத்து நீங்கள் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் நாங்கள் சொத்தை எங்கள் கைவசம் வைத்து அனுபவித்து வந்ததால் நாங்கள் மேல்முறையீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் கூறியது போல்

இந்த பிரதிவாதிக்கு இந்த 7 சென்டு சொத்தை பொறுத்து எந்த உரிமையும் இல்லை அவரின் மகனுக்கு தான் இந்த சொத்து பாத்தியப்பட்டது. இந்த சுரேஷ் என்பவர் பட்டா போன்ற அனைத்து தீர்வுகளையும் பெற்று அவர் தான் சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. உங்கள் அப்பா இந்த 7 சென்டு சொத்தை பொறுத்து எற்கனவே கிரையம் செய்து கொடுத்ததால் உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் பிரதிவாதியை கஷ்டபடுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் வழக்கு தாக்கல் செ ய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. ராஜைய்யன் என்பவருக்கு கிரையம் செய்யப்பட்டது தெரியும் அதனால் தான் அவர் இறந்த பிறகு இந்த வழக்கு போட்டிருக்கிறீர்கள் என்றால் சரியல்ல அவர் இறந்தபிறகு தான் பிரச்சனை எற்பட்டது அதனால் தான் அவர் இறந்த பிறகு இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.